
தினமலர்
பக்தி மலர்
9.6.2016
நாளிதழுடன் இணைப்பு
18 சித்தர்கள்
அருள்பாலிக்கும் சக்திபீடம்!

# 18 சித்தர்கள்

## அருள்பாலிக்கும் சக்திபீடம்!



கே.வி.எல்.என். சர்மா.



**கோயில்களின் நகரமான காஞ்சிபுரத்தில் ஸ்ரீவித்யா உபாசகர் பரம்பரையில் வந்த மரகதம்பாள் - வரதராஜர் தம்பதியருக்கு ஜனவரி 22ம் தேதி,1870ம் ஆண்டு மகான் சத்குரு ஸ்ரீசேஷாத்ரி சுவாமிகள் அவதரித்தார்.**

திருவண்ணாமலையில் பல லீலைகள் புரிந்து, 40 ஆண்டுகாலம் வாழ்ந்து, ஜீவ சமாதி அடைந்தார். ஜீவ சமாதி அடைந்தும் சூட்சும ரூபத்தில் பலரை ஆட்கொண்டு மக்களின் இன்னல்களை இன்றும் தீர்த்துக்கொண்டு இருக்கிறார். அப்படி சூட்சுமத்தில் ஆட்கொண்ட சீடர்களில் ஒருவர் கே.வி.எல். என். சர்மா. இவர் கும்பகோணம் அருகில் உள்ள கஞ்சனூரில் பிறந்தவர்.

சென்னை அடுத்த மாடம்பாக்கத்தில் தேனுபுரீஸ்வர் கோயிலுக்கு அருகில், சத்குரு சேஷாத்திரி சுவாமிகள் அருள் ஆணைப் படி,கே.வி.எல்.என் சர்மாவின் முயற்சியில் அமைக்கப்பட்டது ஸ்ரீசக்ர மகாமேரு 18 சித்தர்கள் பிருந்தாவன சக்திபீடம்.

இந்தப் பீடத்தில், சத்குரு சேஷாத்திரி சுவாமிகள் உலகோர் நன்மைக்காக கோயில் கொண்டு பக்தர்களுக்கு சூட்சும உருவில் அருள்பாலித்து வருகிறார்.

இக்கோயிலில் நவக்கிரகங்களுக்குப் பதிலாக ஒரு கிரகத்துக்கு 2 சித்தர்கள் வீதம் 18 சித்தர்கள் தனித்தனி சன்னதிகளில் எழுந்தருளி இருப்பது இத்தலத்தின் கூடுதல் சிறப்பு!

இரண்டரை ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருக்கும் இக்கோயில் பக்தர்களின் நிதி உதவியைக்கொண்டே அமைக்கப்பட்டுள்ளது. நுழைவு வாயிலில் முன்பு நந்தி இருக்கிறார். இடது பக்கம் ராமர், சீதை, அனுமன் சன்னதியும் அதை அடுத்து கோசாலையும் இருக்கின்றன.



ஸ்ரீ ராமர் சீதை லக்ஷ்மணர்



ஸ்ரீ வள்ளி தேவசேனையுடன் ஸ்ரீ சுப்பிரமணியர்

வலதுபுறம் நாகேஸ்வரர் இருக்கிறார்.

நுழைவு வாயிலுக்கு நேரே மகாமேரு சக்தி பீடம். இந்தப் பீடத்தில் சதாசிவனையே

இருப்பிடமாகக் கொண்டு அருள்பாலிக்கிறார் லலிதா திரிபுர சுந்தரி. மகானின் ஆணைப்படி பச்சைக்கல்லில் அமைந்த மகாமேருவில் அம்பிகை குடிகொண்டு பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறாள். அம்பிகை சன்னதிக்கு வலது புறம் மகான் சேஷாத்ரி சுவாமி சன்னதி உள்ளது.இடதுபுறம்குருவாயூர்கிருஷ்ணன்சன்னதி உள்ளது. இத்துடன் சக்திபீட கணபதி, வள்ளி தெய்வானை சமேதராக சுப்ரமண்யர், ஸ்ரீஐயப்பன், ஸ்ரீமுனீஸ்வரர், பச்சைக்கல் ஸ்ரீராஜகாளியம்மன், ஸ்ரீதட்சிணாமூர்த்தி, ஸ்ரீகாமதேனு, சமயக்குரவர்கள் நால்வர், நந்திகேஸ்வரர், மகாவிஷ்ணு, ஸ்ரீபிருந்தசன்னதி மற்றும் 18 சித்தர்கள் தனித்தனி சன்னதிகளில் அருள் பாலிக்கிறார்கள். இக்கோயிலில் நவக்கிரகங்களுக்கு மாற்றாக சித்தர்கள் இருக்கிறார்கள்.

### எம்.ஜி.ஆரின் இஷ்ட தெய்வம்

எம்.ஜி.ஆரின் இஷ்ட தெய்வம் ராஜகாளி



அம்மன் இங்கு கோஷ்ட தெய்வமாக இருந்து அருள்பாலிக்கிறார். இந்த ராஜகாளி அம்மனுக்கு செங்கோல்பூஜை 40 நாட்களுக்கு செய்துவந்தால், எல்லாமே சாதகமாக அமையும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும்.

### செங்கோல் பூஜை

இக்கோயிலில் மகா கணபதி ஹோமம், பவுர்ணமி பூஜை, செங்கோல் பூஜை, சித்தர்கள் பூஜை, லலிதா திரிபுரசுந்தரி மூலமந்திர பூஜை ஆகியன பக்தர்கள் அவசியம் பங்குகொள்ள வேண்டிய வழிபாடுகள் ஆகும்.



உடல்நலம், செல்வம், நிம்மதியான வாழ்க்கை, அரசாங்க காரியம், அரசாங்க பணி இவைகள் உங்களுக்கு கிடைக்க இங்கு வழிபடலாம்.

### பாலாலயம்

இதுதான் முதலில் நிறுவிய ஆலயமாகும். இங்கே காணிப்பாக்கம் பிள்ளையார் போன்றே



திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பாலாலயம் தொடங்கிய நாள் முதல் இன்று வரை தினமும் கணபதிஹோமம் நடைபெற்று வருகின்றது.

பாலாலயத்தில் மகான் சேஷாத்ரி சுவாமி சன்னதி அமைந்திருக்கிறது. இங்கு மகான் பீடத்தில் சூட்சம ரூபமாகத் தாம் பக்தர்களிடம் பேசுவேன் என்று கூறியபடி, பக்தர் தம் கோரிக்கைகளை மகானிடம் கூறுகிறார்கள்.

## சூலினி துர்க்கா

பாலாலயத்தை தரிசனம் செய்துவிட்டு, மூல ஆலயம் செல்லும் வழியில் சூலினி துர்க்கா அருள்பாலிக்கிறார். இவரை வணங்கினால் பில்லி, சூனியம், ஏவல், வஞ்சனை இவற்றிலிருந்து விடுபடலாம்.

## அரூபலட்சுமி

இயந்திர வடிவில் இருக்கும் அரூபலட்சுமிக்கு பெண்கள் மட்டுமே செய்யக் கூடிய பூஜையாகும். இப்பூஜைசெய்தால்சகலஐஸ்வர்யங்களும் கிடைக்கும். நினைத்த காரியம் நிறைவேறும்.

## ஸ்ரீபராசக்தி வேல்

ஸ்ரீபராசக்தி வேலையும், ஸ்ரீநாகராஜரையும் வேண்டிக்கொண்டால் தீராத பகை, சர்ப்பதோஷம், செவ்வாய் தோஷம் நீங்கும்.

## வழிபடும் முறைகள்:

முதலில் ஸ்ரீஆதிசக்திபீட கணபதியை தரிசித்து முழுதேங்காய் வைத்து பிரார்த்தனை செய்யவும். பிறகு, மூலாலய ஸ்ரீசுந்தர கணபதியை வணங்கி, பின்னர் சுப்ரமணியரை வணங்க வேண்டும். பிறகு, கோஷ்ட தெய்வங்களான தட்சிணாமூர்த்தி, ராஜகாளி, மகா விஷ்ணுவை தரிசனம் செய்ய வேண்டும். அடுத்ததாக, ஸ்ரீசக்ரமகாமேரு, சதாசிவ பலகையாக, சிவசக்தி ஐக்கியமாக இருக்கும் அம்பிகையை தரிசிக்க வேண்டும். பிறகு, குருவாயூரப்பர், ஸ்ரீசேஷாத்திரி சுவாமி, நால்வர்கள், 18 சித்தர்கள், ராமர், ஆஞ்சநேயரை தரிசித்து கடைசியாக ஸ்ரீநாகராஜரிடம் உங்கள் மனக்குறைகளை இறக்கி, மனநிம்மதியுடன் இல்லம் திரும்புங்கள்.

**தரிசன நேரம்:** காலை 6 மணி முதல் மதியம் 12 மணிவரையும் மாலை 4.30 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும் தரிசனம் செய்யலாம்.

**வழித்தடம்:** தாம்பரத்தில் இருந்து 51ஜி, 51 கே மற்றும் குரோம்பேட்டில் இருந்து மினிபஸ் வசதி உண்டு.

**தொடர்புக்கு:** ரவிசங்கர்: 044-22281408, 98840 57317

**தேவராஜன்,**
**படங்கள்: செல்வம்**



ஸ்ரீ [illegible] அம்மன் ([illegible])



ஸ்ரீ சுந்தர கணபதி



ஸ்ரீ தட்சிணாமூர்த்தி



ஸ்ரீ குருவாயூரப்பன்